1973 மார்ச் 31]

எல்லைக்குள்ளே அந்த வங்கி திறக்கப்படவில்லையென்று. அவர் சொல்வது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் கிளை இருக்கிறது என்று சொல்கிற தகவல் உண்மையா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நான் சொன்னது கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் ஒரு நில வள வங்கியின் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. அதை உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களாவென்று கேட்கிறேன். அதை எழுதி வேண்டுமானாலும் அனுப்ப முடியும். கிள்ளியூர் ஒன்றியத்தின் ஒரு பகுதியில் ஒரு கிளை திறக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கிள்ளியூர் யூனியன் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிறது. தக்கலை கல்குளம் தாலுகாவில் இருக்கிறது. கிளை கிள்ளியூர் யூனியன் பகுதியில் திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு வேளை கிளைக்கும், பிரதம வங்கிக்கும் உள்ள வித்தியாசம் தெரியாத குழப்பத்தில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிளை இப்போது தக்கலை கிளையாக இருக்கிறது. தக்கலை கல்குளம் வட்டத்தில் உள்ளது என்று தெரியும். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் திறக்கப்பட்டிருக்கிறது. அதை விளவங்கோட்டில் உள்ள அந்த வங்கியோடு சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி எற்பட்டதா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நிலவள வங்கிகளைத் தொடங்கும் போது அந்தப் பிரதேசத்திலுள்ள சட்டமன்ற . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த ஊருக்கெல்லாம் போக வேண்டாம். அப்புறம் எல்லோரும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஓட்டல் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்

* 594 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஓட்டல்களில் பணியாற்றும் குறைந்த வருவாய் உடைய தொழிலாளர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரும் சிறப்புத் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே. லட்சக் கணக்கான ரூபாயில் ஓட்டல்களைக் கட்டுகிற முதலாளிகள் ஓட்டல் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் அமைத்துத் தருவதற்கென ஓட்டல் முதலாளிகள் சங்கத்தினரை அழைத்துப் பேசி ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்த வருவாயில் உள்ளவர்களுக்கு, மாதாமாதம் சம்பளத்தில் பிடித்துக் கொள்கிற வகையில் வீடு கட்டித் தர ஒரு சிறப்புத் திட்டம் அமைக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்போது வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்களை வைத்துக்கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதிலே ஒரு ரூபாய் தினசரி சேமித்து 5 ஆண்டு காலம் சேமித்தால் கூட வீடு கட்டித்தருகிற திட்டம் இருக்கிறது. அந்த வகையிலாவது அல்லது தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக வீடு கட்ட முடியும். இப்படி வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் பல்வேறு திட்டங்களும இருக்கின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினால் இந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரலாம். குறிப்பாக ஓட்டல் தொழிலாளர்கள் தினசரி பக்ஷீஸ் பெறுகிற தொழிலாளர்கள், அவர்கள் தினசரி ஒரு ரூபாய் சேமிப்பது என்பது சுலபம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அவ்வாறு ஓட்டல் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு முன்னாலே முதலாளிகள் அவர்களை ஓட்டல்களில் தங்குவதற்கு இடம் தர மாட்டேன் என்று சொல்லி அவர்கள் பிளாட்ஃபாரங்களில் தங்கவேண்டிய அவல நிலைமை இருக்கிறது. ஓட்டல் தொழிலாளர்கள் எங்கெங்கே அதிகமாக வசிக்கிறார்களோ அங்கே மொத்தமாக அவர்கள் தங்க கட்டிடத்தை ஹவுசிங் போர்டு குறைந்த வாடகையில் கட்டித்தர முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் அவர்களுக்குச் சொந்தத்திலே வீடு கட்டவேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். ஓட்டல் தொழிலாளர்கள், மற்ற தொழிலாளர்கள் அவரவர்கள் தாங்கள் வேலை செய்கிற பகுதிகளின் பக்கத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஓட்டல்கள் ஜன நெருக்கடியான பகுதிகளில் இருக்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்பது கூடுமான காரியமல்ல. அவர்கள் கொஞ்சம் தூரம் சென்று வீடுகள் கட்டிக் கொள்ளத் தயாராக இருந்தால் அதைச் செய்து தர அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஓட்டல் தொழிலாளர்கள் பக்ஷீஸ் பெறுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பக்ஷீஸ் பெறுகிற பழக்கம் சில மேல் நாடுகளில் எப்படியிருக்கிறது என்று கேட்டால் ஓட்டல்காரர்கள் அதை உணவோடு சேர்த்து வசூல் செய்து விடுகிறார்கள். அதற்கு ஒத்த முறையிலே நம்முடைய சுற்றுலா வாரியத்தின் மூலம் நடத்தப்படுகிற ஓட்டல் களில் அப்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மேல் நாட்டைப் போலவே இந்த நாட்டிலேயும் தனிப்பட்டவர்களிடத்திலிருந்து வசூல் செய்து கொடுக்கிற பழக்கம் ஸ்டார் ஓட்டல்களில் இருக்கிறது. எல்லா நாடுகளிலேயும் ஒரே மாதிரியான நிலைமைதான். மற்ற ஓட்டல்களில் அவர்களாகவே தந்து விட்டுப் போவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்குக் குடியிருப்பு

*** 595 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அலுவலர்களுக்கு வாரியத்தின் மூலம் வாடகைக்கு வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கு வாடகைக்கு விடு கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் அலுவலர்களுக்கென தனியாக எந்த ஒரு திட்டமும் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Government aware that for the houses allotted on rental basis the employees of the Housing Board are charged rent much higher than the rent for the same type of houses by the public ? If the public paid Rs. 10 for a house the Housing Board employee for a similar house has to pay Rs. 25. Is the Government aware of this ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, என்னிடத்தில் இது பற்றிய குறிப்பு இல்லை. இருந்தாலும் அவர் சொல்கிறபடி வாடகை வாரி யத்தில் அதிகமாக வசூலிப்பதாக எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தால் தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் நகரப் பகுதிகளிலே இருப்பவர்களுக்குப் பயன்